[1982 பிப்ரவரி 2]

திரு. நா. சுந்தரராஜ் : பல ஆண்டுகளுக்கு முன்பு அரசுப் பண்ணை ஒன்று என் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக பல இலட்சக்கணக்கான ரூபாயில் கட்டடங்கள் கட்டப்பட்டு இன்று அப்பண்ணை செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆராயப்படும்.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.

*வினா எண் 9 திரு. து. புருஷோத்தமன், திரு. செ. செம்மலை, திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணெய் வித்துக்கள் 1978–79, 1979–1980 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி அளவு எவ்வளவு ?

(ஆ) உற்பத்தியை பெருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

திரு து. புருஷோத்தமன் : கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் இவைகள் எல்லாம் ஏழைகள் வாங்கமுடியாத அளவிற்கு அவற்றின் விலைகள் ஏறியிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? ஆகவே, அவற்றின் உற்பத்தியை தீவிரப்படுத்த புதுத் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா ? அதே போல் மத்திய அரசு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்கிறது. தேங்காய் எண்ணெய் விலை ஏறாமல் இருக்க மத்திய அரசிடமிருந்து தேவையான அளவு, அதிகப்படியான அளவில் தேங்காய் எண்ணெய் பெறுவதற்கு திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து : எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகமாக்க வேண்டும் என்பதற்காகத்தான் எண்ணெய் வித்துத் துறை என்பது நிறுவப்பட்டு 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளிலிருந்து அது இயங்கிக் கொண்டிருக்கிறது. வித்துக்கள் அதிகமாக உற்பத்தியாவதற்குரிய வகையில்,

* 129 மற்றும் 130 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

பல்வேறு சலுகைகள் வேளாண் பெருமக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதே போல் தென்னை உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இத்திட்டங்கள் எல்லாம் வெற்றி பெறுமானால் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் எண்ணெய் விலையைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் நிச்சயமாகக் கிடைக்கும்.

திரு து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்வதாக அறிகிறேன். எனவே, மத்திய அரசிடமிருந்து தேங்காய் எண்ணெயை அதிகமாகப் பெற்று, ஏறிக் கொண்டிருக்கும் அதனுடைய விலையைக் குறைப்பதற்கு ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, வேறு துறையிடம் கேட்க வேண்டிய கேள்வி.

திரு செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற திட்டங்களோடு, எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயிகளுக்கு ஏதாவது இன்சென்டிவ் அதாவது மானிய உதவி வழங்குகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படி வழங்கப்பட்டு வருகின்றது. பயிர் பாதுகாப்புக்கானப் பூச்சி, நோய் கொல்லி மருந்துகள் பாதி விலையில் எண்ணெய் வித்து சாகுபடியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், ஒட்டு மொத்தமாக பூச்சி மருந்தடிக்க மானியம் ஹெக்டேருக்கு ரூபாய் 15 வீதம் வழங்கப்படுகிறது. 1981 82-ஆம் ஆண்டில் 50,000 ஹெக்டேரில் 9 மாவட்டங்களில் ஒட்டு மொத்த பூச்சி, மருந்தடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைப்போலவே, தரமான வித்துக்கள் மூலமே உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை நன்கறிந்து 4,500 டன் தரமான நிலக்கடலை விதை, 50 டன் எள் விதை, 900 டன் சூரியகாந்தி விதை, 23 டன் ஆமணக்கு விதை நடப்பு ஆண்டில் வழங்கத் திட்டமிட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திரு செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெவித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில், கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஏதாவது செயல்பட்டு வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

1982 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, செயல்பட்டு வருகின்றது.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சமையலுக்குப் பயன் படுத்தும் பாமாலின் எண்ணை, மலேசியாவிலுள்ள பனங்கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. தமிழகத்திலும் கோடிக்கணக்கான பனைமரங்கள் இருக்கின்றன. எனவே, இங்குள்ள பனங்கொட்டைகளிலிருந்து அத்தகைய பாமாலின் எண்ணை தயாரிக்கின்ற செயற் குறிப்பு உண்டா ? அதற்கான பூர்வாங்க ஆராய்ச்சி ஏதாவது செய்யப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, செம்பனை சாகுபடியை ஊக்குவித்து ''பாமாலின்'' எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்ள திட்டம் ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மலேசியாவிலுள்ள சீதோஷ்ண நிலை தமிழ்நாட்டிலேயும் உள்ளதால், இங்கும் அத்தகைய பனை மரங்களை பயிரிடுவதற்கான யோசனை தமிழக அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே அத்தகைய பருவ நிலைகள் கொண்டுள்ள கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இம்மரங்களை வளர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்த அரசு தயாராக இருக்கிறது.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரெட் ஆயில் பாம் அமைப்பதற்கான இடங்கள் பார்க்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு, வன இலாகாவிலிருந்து அந்த இடத்தைப் பெறுவதற்காக அவர்கள் குறிப்பு அனுப்பியிருந்தார்கள். வன இலாகாவிலிருந்து அந்த இடத்தைப்பெற்று பாம் மரங்கள் பயிரிடுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த முயற்சி மேற்கொள்ளப்படும். வனத் துறை இந்தத் துறைக்கு கருணை காட்டும் என்று நம்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே தீவிர எண்ணெய் வித்து சாகுபடிக்கும், நிலக்கடலை, சூரியகாந்தி போன்றவற்றிற்கும்

1982 பிப்ரவரி 2]

மத்திய அரசு உதவித் தொகை அளிப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி கொடுக்கப்படும் உதவித் தொகை, ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று இருக்கிறதா ? அல்லது அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், ஏதாவது பூச்சி விழுந்தால் அதைப் போக்குவதற்காக மட்டும் உதவித் தொகை வழங்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் போன்றவைகளுக்கு அரசு மானியம் அளிக்கிறது. அதைப்போலவே, எண்ணை வித்துக்களை அதிகமாக்குவதற்குத் தேசிய பால் வள வாரியத்தின் உதவியோடு தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்விணையகம் ஜனவரித் திங்கள் 1981 முதல் இயங்கி வருகிறது.

திரு சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையகம் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அந்த இணையகம் மேற்கொண்ட பணியின் காரணமாக, மேற்கொண்டு எந்த அளவுக்கு எண்ணை வித்துக்கள் அதிகரித்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்த இணையகம் நிலக்கடலை பயிரிடுவதை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டு வருகிறது. முதற்கட்ட பணியாக, தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் இவ்விணையத் திட்டம் செயல்படுத்தப்படும் நிலைமை இருக்கிறது. உற்பத்தியாகக் கூடிய சூழ்நிலையோ அல்லது உற்பத்தி ஏற்பட்டது பற்றியோ இன்னும் தெளிவாக நமக்கு விவரம் கிடைக்கவில்லை.

வேலையற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்.

*வினா எண். 10—திரு செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேலையற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வழங்கும் திட்டம் என்ன நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் வேலைக்காகப் பதிவு செய்து கொண்ட வேலையற்றிருக்கும் விவசாயத் தொழிலாளர் மட்டு